15th December 1959]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) The Wool processing Centre at Vinnamangalam could not be stated in April 1959 as anticipated due to the difficulty experienced in obtaining certain essential items of machinery. Action is being taken for the import of these machines. The Centre is expected to start production early in 1960.

(b) There is no correspondence between the Government of Mysore and this Government about this. But the Government of Mysore are aware that the production in the Centre has not yet been started due to non-receipt of some of the machines.

SRI P. G. MANICKAM : *இந்தக் கம்பளி தொழிற்சாலையை நிறுவுவதற்காக மூலதனம் எவ்வளவு தேவைப்படும்? அதற்கு நமது சர்க்காரும், மைசூர் சர்க்காரும் எவ்வளவு தொகை போட சம்மதித்திருக்கிறார்கள்? இந்திய அரசாங்கத்திலிருந்து ஏதாவது இதற்கு உதவி கிடைக்குமா?*

THE HON. SRI M. BHAKTAVATSALAM : *மதிப்பிட்ட மொத்த மூலதனம் 13,10,250. கட்டிடத்திற்காக மாத்திரம் 4,20,250 ஆகிறது. இது இரண்டு சர்க்கார்களும் சேர்ந்து மத்திய சர்க்காரின் உதவியை வைத்துக்கொண்டு இது நிறைவேற்றப்படயிருக்கிறது.*

Power-boring drills

• 201 Q.—SRI R. SRINIVASA IYER : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) how many power boring drills are owned by the State;
(b) how many of them are in working condition; and
(c) where they are working at present?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : A statement * is placed on the table of the House.

SRI R. SRINIVASA IYER : Sir, it is stated that all the available 29 drills excluding the 3 calyx type drills are working in several districts. Are spare parts available for repairing them, as I learn that many of them are not in working order? Have the Government any scheme for purchasing new drills as they are in very great demand?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I may tell the hon. Member that all the 29 drills are in working order but still for spare parts, foreign exchange is necessary and that is being arranged. It is also proposed to have some more power drills.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Sir, under whose jurisdiction are these drills? Is it under the Director of Agriculture or under the Director of Industries?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Now it is under the Director of Agriculture.

SRI R. KRISHNASAMI NAIDU : *மேஜை மீது வைக்கப்பட்டுள்ள விவரங்களில் இருந்து ராமநாதபுரம் ஜில்லாவில் ஒரு*

*Printed as Appendix II on page 241 infra.

பவர் ட்ரில்தான் பல வருடங்களாக இருந்து வருவதாக தெரிகிறது. ராமநாதபுரம் ஜில்லாவில் கூடுதல் பவர்ட்ரில்கள் வேண்டுமென்று பல ஆண்டுகளாக எத்தனையோ விண்ணப்பங்களும், நேரில் பல தடவைகள் அதிகாரிகளைக் கண்டு சொல்லியும் பயனில்லை. அங்கு கூடுதல் பவர் ட்ரில்கள் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். மற்ற ஜில்லாக்களிலிருந்து ராமநாதபுரம் ஜில்லாவிற்கு இடையிடையே அங்குள்ள ட்ரில்களை அனுப்பித்தரமுடியும் என்று தெரிகிறது. ஆகவே, இதற்கு சௌகரியம் செய்து தர அரசாங்கம் நல்லதொரு திட்டத்தை செய்து தர முன்வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ராமநாதபுரம் மாவட்டத்திற்கு மேலும் பவர் ட்ரில்கள் வரவழைத்துக் கொடுக்க இப்பொழுது கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

SRI V. K. KOTHANDARAMAN : வட ஆற்காடு, சேலம் இவைகள் எல்லாம் ஆலைகள் நிறைந்த ஜில்லாக்கள். அங்கு, எங்கு பார்த்தாலும் கிணறுகள் வெட்டினால், பாறைகள்தான் வரும் என்பது அமைச்சர் அவர்களுக்கு தெரியுமா ? ஆகவே, உடனடியாக அங்கு கூடுதலாக பவர் ட்ரிர்கள் வரவழைத்துக் கொடுக்க சர்க்கார் முன்வருமா ?

MR. SPEAKER : இப்படி ஒவ்வொரு அங்கத்தினரும் அவரவர்கள் ஜில்லாக்களைப்பற்றி கேட்டால் எப்படி பதில் சொல்ல முடியும்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ராமநாதபுரம் மாவட்டத்தைப் பற்றி அளித்த விடை மற்ற மாவட்டங்களுக்கும் பொருந்தும்.

SRI R. SWAMINATHA MERKONDAR : தற்போது Ford Foundation உதவியின் கீழ் தஞ்சை ஜில்லாவை எடுத்திருக்கும்போது தஞ்சை ஜில்லாவில் ஒரத்தநாடு பாகத்தில் மட்டும்தான் இந்த ட்ரில் இருக்கிறது. தஞ்சை ஜில்லாவில் வரண்ட பிரதேசங்கள் அதிகமாக யிருப்பதால் அதிகப்படியான பவர் ட்ரில்ஸ் அங்கு தருவதற்கு அமைச்சர் அவர்கள் உதவி செய்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : வேறு மாவட்டங்களிலும் அதிகப்படியான வரண்ட பிரதேசங்கள் இருக்கிறது என்பது அங்கத்தினருக்கு தெரியும்.

Use of Regional Languages on post cards, etc.

*202 Q.—SRI S. M. ANNAMALAI : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

1959-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 7-ம் தேதி 117-ம் எண் கேள்விக்கு அளித்த பதிலையொட்டி மணியார்டர், கார்டு, கவர்கள் பிராந்திய மொழிகளில் அச்சடிக்க வேண்டுமென்று மாநில சர்க்கார், மத்திய சர்க்காருக்கு செய்த சிபாரிசுக்கு என்ன பதில் வந்துள்ளது ?